**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட சிறந்த தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கங்களைத் தவிர ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களிலிருந்தான விலகல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம், மூலதன சொத்துக்கள் தொடர்பாகப் பெறப்படும் அரச மானியங்கள் வருமானத்திற்கு கொண்டுவரப்பட வேண்டிய போதிலும் நிறுவகங்களின் பெறுமானத்தேய்வுக் கொள்கைக்கு இணங்கும் வகையில் செயற்படாது வருடாந்த மானியத்தில் 25% மாத்திரமே வருமானத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கட்டிடப் பழுதுபார்த்தற் செலவினத்தில் ரூபா 1,865,408 தெகையான மூலதனச் செலவினம் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவினம் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான மிகையும் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் நிலையான சொத்துக் கிரயமும் ஒத்த தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அனுமதிப்பத்திர மற்றும் காப்புறுதிக் கட்டணக் கணக்கில் எதிர்வரும் ஆண்டிற்கு உரித்தான ரூபா 266,530 தொகையான ஓர் செலவினம் மீளாய்வாண்டிற்கான செலவினமாக கணக்கிடப்பட்டிருந்த காரணத்தினால் ஆண்டிற்கான மிகையும் நடைமுறைச் சொத்துக்களும் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பணிக்கொடை ஒதுக்கக் கணக்கின் மீதி ரூபா 1,048,783 குறைத்துக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டிற்கான பணிக்கொடைச் செலவினமும் நடைமுறைப் பொறுப்பும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது ஓர் ஊழியருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 185,216 தொகையான இடர் கடன் தொகை ஊழியர் கடன் மீதியில் இருந்து விடுப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் வருமானத்தின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணங்கள் ரூபா 8,483,639 ஆன போதிலும் ஏற்பாடு செய்யப்பட்ட கட்டணம் ரூபா 8,121,211 ஆனமையால் ரூபா 362,428 குறைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) வழங்கப்பட்டு எனினும் பின்னர் இரத்துச் செய்யப்பட்ட ரூபா 2,561,975 தொகையான காசோலைகளின் பெறுமதி இரத்துச் செய்யப்பட்ட காசோலைக் கணக்கின் மூலம் சீராக்கப்படுவதற்குப் பதிலாக செலவினமாகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன் இதற்குச் சமமான மீதி வருமானமாகக் கருதப்பட்டு செலவினமும் முன்னைய ஆண்டின் இலாபமும் கூடுதலாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த 155 நிலையான சொத்து விடயங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த அம்பியூலன்ஸ் வண்டிகள் இரண்டும் உள்ளடக்கியிருந்தது.

### 1.2.3 இணக்கம் செய்யப்பட்டிராத கணக்குகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | | கணக்கு விடயங்கள் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதி | துணை நினைப்பதிவேடு/ மீதிகளின் உறுதிப்படுத்தல்களின் பிரகாரமான மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | (i) | மருந்துக் களஞ்சியம், அறுவைச் சிகிச்சைக்கான பொருட் களஞ்சியம்,, மருத்துவ உபகரண உதிரிப்பாகங்கள் களஞ்சியம், சாதாரண களஞ்சியம், மற்றும் கதிரியக்க பிரிவில் நுகரப்பட்ட பொருட் களஞ்சியம் | 281,633,129 | 253,242,211 | 28,390,918 |
| | (ii) | கட்டும் பொருட்கள் மற்றும் மருத்துவ ஆய்வுகூட பிரிவில் நுகரப்பட்ட பொருள் இருப்புப் பெறுமதி | 104,484,966 | 116,236,077 | (11,751,111) |
| (ஆ) | | அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபன கடன்கொடுத்தோர் | 5,083,240 | 2,769,792 | 2,313,448 |
| (இ) | | மருந்து வழங்கல் பிரிவு – கடன்கொடுத்தோர் | 322,368,518 | 206,320,152 | 116,048,366 |

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) (i) பல ஆண்டு காலமாக அறவிடப்படாதிருந்த பின்வரும் பெற வேண்டிய கணக்கு மீதித் தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | காலப்பகுப்பாய்வு |
|---|---|---|
| | ரூபா | |
| பெற வேண்டிய வருமானம் | 211,147 | 5 ஆண்டுகளுக்கு மேலானவை |
| பிராந்தியக் கொள்வனவு முற்பணங்கள் | 20,221 | மேற்படி |
| சில்லறைக் கடன்பட்டோர் | 1,676,022 | மேற்படி |
| Clinical Society | 44,463 | மேற்படி |
| சுகாதாரக்கட்டணங்கள் - சுகாதார அமைச்சு | 5,907,011 | ஒரு வருடத்திற்கு மேல் |
| விழா முற்பணம் | 178,500 | 8 வருடங்களுக்கு மேல் |
| சம்பள முற்பணம் | 29,690 | 10 வருடங்களுக்கு மேல் |
| விசேட முற்பணம் | 5,800 | மேற்படி |
| பாடசாலைப் புத்தக முற்பணம் | 48,300 | மேற்படி |
| அறவிடப்பட வேண்டிய வைத்தியசாலைக் கட்டணங்கள் | 309,731 | 5 வருடங்களுக்கு மேல் |
| மேற்படி | 1,807,095 | 1 முதல் 4 வருடங்களுக்கு மேல் |

இவற்றை அறவிட முடியாமையால் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக தலைவர் அறிவித்துள்ளார்.

(ii) ரூபா 211,147 பெறுமதியான அறவிட வேண்டிய கணக்குகளுக்காகவும் ரூபா 12,307,317 பெறுமதியான நானாவித கடன்பட்டோருக்காகவும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) கீழே குறிப்பிடப்பட்ட மீதிகள் பல வருட காலமாக தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | காலப்பகுப்பாய்வு |
|---|---|---|
| | ரூபா | |
| அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை | 3,618,963 | 5 ஆண்டுகளுக்கு மேல் |
| கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவினம் | 177,797,320 | மேற்படி |

(ii) ரூபா 2,659,630 பெறுமதியான சில்லறைக் கடன்கொடுத்தோருக்காகவும் ரூபா 128,345,802 பெறுமதியான வியாபார மற்றும் சேவை கடன்கொடுத்தோருக்காகவுமான மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

**1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| (அ) தாபன விதிக்கோவை | |
| (i) ix ஆம் அத்தியாயம் 2.2 ஆம் பிரிவு | அரச சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட அநுபவம் மற்றும் அறிவையும் பயன்படுத்தி உத்தியோகபூர்வக் கடமைகளுக்கு இடைஞ்சல் விளைவிக்காத வகையில் கடமை நேரங்களிற்குப் புறம்பாக மேற்கொள்ளும் காரியாலயக் கடமைகள் அல்லாத வேலைகளுக்காகப் பெறப்படும் கட்டணத்தில் 10% திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 166,075,485 தொகையான தொழிற்துறைக் கட்டணங்கள் தொடர்பாக இதன் பிரகாரம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை பாரளுமன்ற விசேட அதிகாரச் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ஏற்பாடுகள் அவ் ஊழியர்களுக்குப் பொருந்தாது என தலைவர் அறிவித்திருந்தார். |

(ii) xix ஆம் அத்தியாயம்

| | |
|---|---|
| (அ) 5.2, 5.3, 5.4 மற்றும் 5.5 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ விடுதிகளுக்குரிய வாடகை குறித்தொதுக்கிய சதவீதத்தில் அறவிடப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களது சம்பளத்தில் 5% அளவிலான வாடகை அறவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) 5.8 ஆம் பிரிவு | நீர், மின்சாரம் மற்றும் எரி வாயு என்பவற்றிற்கான கட்டணம் உத்தியோகத்தர் களினால் செலுத்தப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக பொது நீர் வழங்கலில் இருந்து நீர் வழங்கப்பட்டு இதற்காக மாதாந்தம் ரூபா 25 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. |

(ஆ) நிதிப் பிரமாணங்கள்

--------------------------------

| | |
|---|---|
| நி.பி. 751 | பெறப்படும் சகல பொருட்களும் வழங்கல்களும் உடனடியாக பொருட்பதிவேட்டில் பதியப்பட வேண்டிய போதிலும் மின்சாரப் பழுதுபார்த்தல் பிரிவும் கட்டிடப் பழுதுபார்த்தல் பிரிவும் பேணப்பட்டுவரும் களஞ்சியம் தொடர்பான களஞ்சியப் பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(உ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| i 5.3.1 ஆம் பிரிவு | நாளதுவரையாக்கப்பட்ட பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத் திட்டத்தின் ஓர் பிரதி வரிசை அமைச்சிற்கு, பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் |

| | | |
|---|---|---|
| | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் உரிய நிதியாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு 15 நாட்களின் முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 – 2014 வரையான காலத்திற்கான கூட்டுத்திட்டம் பணிப்பாளர் சபையினால் 2011 மே 20 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| ii | 4.2.1 இன் (இ) மற்றும் 4.2.2 ஆம் பிரிவு | வைத்தியசாலையின் பௌதீகச் செயலாற்றல் இலக்குகளும் நிதிச் செயலாற்றல் இலக்குகளும் தெளிவாகக் காண்பிக்கப்படும் வகையில் 2010 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| iii | 7.4.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக வைத்தியாசாலையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2007 மே 15 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை மற்றும் 2009 யூலை 08 ஆம் திகதிய பீஈடீ/பீயூ ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைவிதிகள் தயாரிக்கப்பட்டு தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணிக் கோப்பு ஆணைக்குழுவிற்கு 2009 யூலை 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் இது சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வைத்தியசாலை செயற்பாடுகளினால் ரூபா 52,064,779 ஆன மிகை விளைந்திருந்த அதேவேளை இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 26,845,806 ஆகக் காணப்பட்டமையால் மிகை ரூபா 78,910,585 தொகையினால் அதிகரித்திருந்தது. இவ் அதிகரிப்பிற்கு வைத்தியசாலைக் கட்டணங்களை அதிகரித்ததன் மூலம் வைத்தியசாலை வருமானம் ரூபா 90.3 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்தமை இவ்வதிகரிப்பிற்கு பிரதான காரணமாகவிருந்தது.

### 2.2 செயலாற்றல்

வைத்தியசாலையின் செயலாற்றல் சம்பந்தமாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

| செயலாற்றல் பிரமாணம் | எய்தல்கள் தொடர்பான கருத்துத்துரைகள் |
|---|---|
| (அ) கட்டில்களின் பயன்பாடு | முன்னைய ஆண்டின் போது 74.78% ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது 66% வரை வீழ்ச்சியடைந்திருந்தது. வாட்களிலும் அவசர சிகிச்சைப் பிரிவின் 10 வாட்களிலும் கட்டில் பயன்பாடு 50% இனைப் பார்க்கிலும் குறைவான மட்டத்தில் நிலவியது. |
| (ஆ) அறுவைச் சிகிச்சை நடாத்தல் | முன்னைய ஆண்டின் போது 17,413 மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 14,154 மேற்கொள்ளப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18.72% இலான குறைவு காணப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (இ) | நோயாளர் பார்வைச் சேவைகளுக்கான வெளி நோயாளர் பிரிவிற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் எண்ணிக்கை | முன்னைய ஆண்டின் போது 61,072 ஆனதுடன் மீளாய்வாண்டின் போது 48,495 வரை 12,577 ஆல் அதாவது 20.59% ஆல் குறைவடைந்திருந்தது. |
| (ஈ) | அணு உலோகத் தணிம கற்கை, ஆய்வு | முன்னைய ஆண்டின் போது 257 மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 136 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 121 ஆக அதாவது 48% ஆல் குறைவடைந்திருந்தது. |
| (உ) | உடற்பயிற்சி மருத்துவ நடவடிக்கைகள் | மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | திறந்த இருதயச் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளுதல் | 2007 ஆம் ஆண்டின் போது 330 உம், 2009 ஆம் ஆண்டின் போது 232 உம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 221 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (எ) | மூடிய இருதயச் சத்திர சிகிச்சையை மேற்கொள்ளுதல் | 2007 ஆம் ஆண்டின் போது 27 மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2009 ஆம் 2010 ஆகிய இரு ஆண்டுகளின் போதும் 3 சத்திரசிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஏ) | கண் மருத்துவத்தின் சீசீரீ ஆய்வுகளின் எண்ணிக்கை | 2007, 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளின் போது முறையே 830 உம் 242 உம் 135 உம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 52 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 61.48% ஆல் குறைவடைந்திருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஐ) | கண் மருத்துவத்தின் காட்சித் துறை ஆய்வுகளின் எண்ணிக்கை | 2007, 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளின் போது முறையே 580 உம் 754 உம் 271 உம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 3 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 98.89% ஆல் குறைவடைந்திருந்தது. |

**2.3 முகாமைத்துவத் திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 10,000,000 தொகையான ஏழுநாள் அழைப்பு வைப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் இது ஏழுநாள் அழைப்பு வைப்பாகவே வைத்திருக்கப்பட்டது. இத் தொகை நீண்டகால முதலீட்டில் ஈடுபடுத்தப்பட்டிருக்குமாயின் வைத்தியசாலைக்கு இலாபகரமான வட்டியை உழைத்திருக்க முடியும்.

(ஆ) ஒவ்வொரு மாதங்களின் போது கொடுப்பனவு செய்யப்படும் மரண உதவிக் கொடுப்பனவு அம் மாதத்தின் இறுதியில் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்டு தீர்க்கப்படுவதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய மரண உதவிக் கொடுப்பனவுத் தொகை ரூபா 900,000 ஆகும்.

(இ) தொழிற்துறைக் கட்டணம் அறவிடுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. தொழிற்துறைக் கட்டணங்களை அறவிடும் நியம முறை இன்மையும், குறித்த சத்திரசிகிச்சைகளுக்காக ஓர் நியமக்கட்டணம் அற்ற காரணத்தினாலும் வெவ்வேறு வைத்தியர்களினால் ஒரே சத்திரசிகிச்சைக்காக வெவ்வேறு கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்ததுடன் ஒரே வைத்தியரினால் மேற்கொள்ளப்படட ஒரே சிகிச்சைக்காகவும் வெவ்வேறு கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது.

ii. மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளுக்காக தொழிற்துறைக் கட்டணங்களாக ரூபா 166,075,485 தொகை நோயாளிகளிடம் இருந்து அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவு, உபகரணங்கள் மற்றும் ஏனைய சகல வசதிகளும் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய சத்திரசிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு ரூபா 21,949,212 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

iii. கட்டணம் செலுத்தப்படும் வாட்களில் காரியாலய நேரங்களின் பின்னர் மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சைகளுக்காக மாத்திரம் தொழிற்துறைக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் காரியாலய நேரங்களின் போது மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளுக்காக 18 சந்தர்ப்பங்களின் போது ரூபா 663,950 தொகையான தொழிற்துறைக்கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) மருந்துக் களஞ்சியங்களில் மருந்துப் பொருட்களின் இருப்பு முடிவுற்று மீள களஞ்சியத்திற்கு மருந்துகள் பெறப்படுவதில் நீண்ட காலதாமதம் காணப்பட்ட 29 வகையான மருந்துப் பொருட்கள் காணப்பட்டதுடன் ஓர் வைத்தியசாலையில் கட்டாயமாக இருக்க வேண்டிய 23 வகையான மருந்துப் பொருட்கள் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இருந்தே களஞ்சியத்தில் பற்றாக்குறையாகக் காணப்பட்டது. இங்கு காலதாமதத்தைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் பற்றாக்குறையான மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தொழிற்துறைக்கட்டணக் கொடுப்பனவுகள், கடன் அட்டைகள் (Credit card) மார்க்கமாகவும் அறவிடப்பட்டிருந்ததுடன் இதற்காக 2% தரகுக்கட்டணம் வங்கிக்குச் செலுத்த நேரிட்டது. எவ்வாறெனினும் மொத்த தொழிற்துறைக்கட்டணமும் வைத்திய மற்றும் ஏனைய பதவியணியினருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் வங்கியினால்

அறவிடப்படும் ரூபா 766,493 தொகையான தரகுப் பணம் வைத்தியசாலைக்கு மேலதிகமான செலவினமாக இருந்தது.

(ஆ) தொழிற்துறைக் கட்டணத்தை சேகரித்தல் மற்றும் கொடுப்பனவிற்காக பேணப்பட்ட நடைமுறைக் கணக்கிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 319,760 தொகை வரவு வரியாக வைத்தியசாலை வருமானத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**2.5 ஒப்பந்த நிர்வாக நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | ஒப்பந்தங்களுக்கு உரித்தான விபரங்கள் | தொகை<br>ரூபா | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (i) | லோன்ரி சேவைகள் நடாத்துதல் | 4,540,560 | • பிரதான வைத்தியசாலைகளில் திருப்திகரமான சேவைகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டு கூடிய விலைகளைச் சமர்ப்பித்திருந்த கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.<br>• மேற்கொள்ளப்பட்ட சேவை திருப்தியற்ற நிலையில் இருந்தமை பின்னர் கண்டறியப்பட்டது. |
| (ii) | வைத்தியசாலைச் சுத்திகரிப்புச் சேவைகள் | 22,253,228 | • சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்ள முடியுமெனக் குறிப்பிட்டு கூடிய விலையிலான கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.<br>• உடன்படிக்கையின் பிரகாரம் ஊழியர்களை ஈடுபடுத்தாமை, நியமத்தின் பிரகாரம் சுத்திகரிப்பை |

மேற்கொள்ளாமை மற்றும் ரூபா 52,320 தொகை இரசாயண பொருட்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுவதனால் ஒப்பந்தங்கள் இரத்துச்செய்யப்பட்டிருந்தன.

- வேறு ஒப்பந்தக்காரருக்கு இக் கேள்வியை வழங்கியிருந்த போதிலும் ரூபா 110,335 தொகையான இரசாயணப் பொருட்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன
- தரமான சேவை ஒன்று பெறப்படுவதில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

## 2.6 விளைவற்ற, மெதுவாக நகரும் மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வைத்தியசாலையின் பிரிவுகள் கணனிமயமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகையில் பிரதான கட்டிடத்தில் வயர் இழுப்பதற்காகவும் மென்பொருட் கொள்வனவிற்காகவும் ரூபா 4,899,050 கூட்டுத்தொகையான தொகை செலவிடப்பட்டு ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் இக் கணனி முறைமையை பூரணப்படுத்தி பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இச் செயற்பாடு 2010 யூலை 21 ஆம் திகதி முதல் 06 மாத காலத்திற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டது.

(ஆ) உயர் இருதய சிகிச்சை நிலையத்தில் பொருத்தப்பட்ட இரண்டு சுழல்நிலைப் பெட்டிக்காக 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 1,650,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் சேவைக் கட்டணமாக 2006 ஆம் 2007 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 117,636 தொகை செலவிடப்பட்டிருந்தது. இவ் உபகரணங்கள் பொருத்தப்பட்டு குறுகிய காலத்திலேயே செயற்பாடற்ற நிலையை அடைந்திருந்தமையால் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தச் செலவினத் தொகையான ரூபா 1,767,636 விளைவற்ற செலவினமாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு முன்னர் வைத்தியாசாலைக்கு அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 2,529,650 பெறுமதியான மருத்துவ உபகரண உதிரிப் பாகங்களின் இருப்பு விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டது.

(ஈ) வைத்தியசாலையின் 7 களஞ்சியங்களில் 01 முதல் 10 வருடங்களாக விளைவற்றுக் காணப்பட்ட இருப்புப் பெறுமதி ரூபா 14,069,841 ஆகக் காணப்பட்டது.

(உ) கழிவுப் பொருட்கள் அகற்றும் இயந்திரம் எப்போதும் செயலிழந்து விடுவதன் காரணமாக அதன் வருடாந்த செயற்பாடு அரைவாசியே பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஊ) 3 ஆண்டுகளுக்கு மேலான காலமாக தனியார் வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 93,615 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அத் தொகை அக் காலம் தொட்டே செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

(எ) 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 160,000 தொகையான நடைமுறைக் கணக்கொன்று இலங்கை வங்கியில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போதும் அத்தொகை நடைமுறைக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டது.

**2.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | விடயம் | தோகை | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| i. | இரத்த குளுக்கோஸ் நெறிப்படுத்தல் குறிப்புக்கள் 17,000 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டமை | 765,000 | மாதிரி சமர்ப்பித்தலில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக ஆகக் குறைந்த விலையான ரூபா 23.58 இனைப் பார்க்கிலும் ரூபா 21.42 கூடுதலாகச் செலுத்தப்பட்டு கூடிய விலையிலான கேள்வியைச் சமர்ப்பித்தவரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 364,140 தொகை மேலதிகமாகச் செலுத்த நேரிட்டது. |
| ii. | Cefrioxone ஊசி 1 சி 1,000 அலகுகள் கொள்வனவுகள் | 122,750 | மருத்துவ வழங்கல் பிரிவினால் ரூபா 42.41 இற்கான மருந்துகள் வேறு வியாபாரப் பெயரின் கீழ் ரூபா 122.75 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 80,390 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்நது. |
| iii. | Metranidozole 500 mg 100 ml Injection 1000 உம் Cefotoxime 1 g Inj vial 1900 உம், Clarithromycin 500 mg inj vial 150 உம் கொள்வனவு செய்தல் | 299,000 | மருந்துகள் கொள்வனவு செய்யப்படும் சந்தர்ப்பத்தின் போது மருந்து வழங்கல் பிரிவில் போதியளவு இருப்புகள் இருந்த போதிலும் வெளித் தரப்பினரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 193,978 ஆகும். |

## 2.8 புலனாகிய மோசடிகள்

வைத்தியசாலைச் சேவையில் இருந்து விலகிச் சென்ற வைத்தியர்களின் பெயர் தவறாக உள்ளடக்கப்பட்டும் வைத்தியர்களின் ஊழியர் சேமலாப நிதிய இலக்கங்களின் கீழ் பொய்யான பெயர்களை உள்ளடக்குதல் போன்ற முறைகளின் மூலம் ரூபா 1,661,950 தொகையான தொழிற்துறைக் கட்டணங்கள் மோசடி செய்யப்பட்டிருந்ததாக 2009 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

## 2.9 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் பயனுறு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையெனக் குறிப்பிடப்படுகின்றது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது வைத்தியசாலைச் சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) களஞ்சியக் கட்டுப்படுத்தலும் மிகையான தொகையைப் பேணலும்
(ஆ) தொழிற்திறன் கட்டணக் கொடுப்பனவு
(இ) கடன்கொடுத்தோர்
(ஈ) மருந்துப்பொருட் கொள்வனவு
(உ) உணவுப் பொருட்கள் கட்டளையிடல்
(ஊ) உணவுப் பட்டியல் தயாரித்தல்
(எ) வைத்தியசாலைச் சமையலறையில் மேலதிகமான இருப்புக்களை வைத்திருத்தலும் பதிவேடுகளைப் பேணுதலும்.
(ஏ) கைவிடப்பட்ட பொருட்களின் விற்பனை